IN THE COURT OF IIIADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No.8/19

Deposition of witness for

PW11 (LW15 )

Name : Thiru. Sivanadam

S/W Name :
Age :
Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of October 2023 .

---

**முதல் விசாரணை**

நான் தற்போது நான் கே.6 டி.பி சத்திரம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றுகிறேன். கடந்த 2018ம் வருடம் கே.7 ஐ.சி.எப். காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியில் இருந்தபோது மேற்படி காவல் நிலைய குற்ற எண்.1/2018 சட்ட பிரிவு 302 இ.த.ச. வழக்கு சம்பந்தபட்ட வழக்கு சொத்துக்களை 6.1.2018ம் தேதி 5வது பெருநகர குற்றவியல் நடுவர் முன்பு வழக்கு சொத்தை சமர்பித்து பி.எண்.13/2018 பெறப்பட்டது. பின்பு 12.1.2018ம் தேதி மேற்படி நீதிமன்ற உத்தரவுபடி வழக்கு சொத்தினை மைலாபூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆய்வுக்கு ஒப்படைத்தேன். 25.5.2018ம் தேதி உயிரியல் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் வழக்கு சொத்தினை மைலாபூர் தடய அறிவியல் ஆய்வத்திலிருந்து பெற்று 5வது பெருநகர நீதிதுறை நடுவரிடம் ஒப்படைத்தேன். 25.7.2018ம் தேதி மைலாபூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் குருதி வடிநீர் இயல் அறிக்கை பெற்று அதனையும் 5வது பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். மேற்படி இரண்டு அறிக்கைகளும் முத்திரையிடப்பட்ட உறையில் கொடுக்கப்பட்டது நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். வழக்கு சொத்துக்களானது இரத்தம் படிந்த இரும்பு துண்டு-

3, இரத்தம் படியாத இரும்பு துண்டு-2, இரத்தம் படிந்த சகதி மண் சிறியது. இரத்தம் படியாத சகதி மண் சிறியது. பிளஸ்டிக் கைப்பிடி கொண்ட இரத்த கறையுடன் கூடிய கத்தி -1, காக்கி நிற முழு பேண்ட் மற்றும் நீள நிற முழு கை சட்டை, இறந்துபோன பிரகஷ் ராஜின் உடலிருந்து எடுக்கப்பட்ட ஜீன்ஸ் பேண்ட், சிகப்பு நிற டீ சர்ட், மஞ்சள் நிற உள்ளாடை ஆகியவையாகும். மேற்படி வழக்கு சொத்துக்களை தான் பகுப்பாய்வுக்கு தடய அறிவியல் துறையில் ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 முதல் 9 வரையிலான சொத்துக்கள் தான் அவை. ஆய்வாளர் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

III Addl. Sessions Judge.
III Addl. Court.